RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s212

# இறைநம்பிக்கையாகும் நடுகல் வழிபாடு

## ம. தனலெட்சுமி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா.

# Atheism is the cult of the grave

## M. Dhanalakshmi [a, *]

[a] Depatment of Tamil, St. Joseph's College, Tiruchirappalli- 620002, Tamil Nadu, India.

* Corresponding Author: dhanam.m1979@gmail.com

Received: 04-01-2021
Revised: 15-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The Superman was afraid of nature and began to worship. In its aftermath, the warrior who guarded the tribal society was worshiped as a deity. In the course of time, heroic worship became a planting ceremony. Later, idolatry took root because of racism. However, the purpose of this study is to show that the Nadukars, which were celebrated by the ancient Tamils, are still worshiped as idols.

**Keywords:** Ethnic group, Idolatry, Conspiracy, Megaliths, Hero stone

## நுழைவாயில்

இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் 'நடுகல்' ஆகும். நினைவுக்கல் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்க்கோ அல்லாமல் உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. இந்தியாவில் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி எல்லா இடங்களிலும் நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. இத்தகைய நினைவுக்கற்களைக் காலப்போக்கில் மக்கள் வணங்கி வந்தமையால் இது நடுகல் வழிபாடு என்ற வழக்கு உருவானது. அதற்குப்பின்னும் அவ்வழிபாட்டில் பல மாறுதல்கள் உருவாகி, நடுகல் எடுக்கப்பட்டோரை இறை நிலையில் வைத்து வழிபடும் நிலை உருவாகியுள்ளது (Krishnamoorthi, 2004). அவ்வாறு, நடுகல் வழிபாட்டிலிருந்து இறைநம்பிக்கையான கண்ணகி வழிபாடு குறித்துச் சிலப்பதிகாரத்தின்வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நடுகல் வழிபாடு

நாடு, இனம் காத்து மாண்ட போர் வீரர்களின் வீரம், தியாகத்தைப் போற்றும்படி அவர்களது நினைவாக நடுகற்கள் நடப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டு வந்துள்ளது. நடுகற்களில் வீரக்கல், சதிக்கல், பட்டவன்கல், புலிகுத்திக்கல், நவகண்டம், ஆயுதக்கல் எனப் பலவகைகள் உள்ளன. அண்டை நாடுகளுடன் போரிட்டு வெற்றிபெறும் வீரர்கள் அங்குள்ள ஆடு, மாடுகளைக் காட்டின் வழியாகக் கொண்டுவரும்போது எதிரே, புலி, சிங்கம், சிறுத்தை போன்ற விலங்குகள் வழிமறிக்கும். அவற்றுடன்

சண்டையிடும்போது உயிரிழக்கும் வீரனுக்கு அந்த இடத்திலேயே நடுகல் நட்டு வைத்து வழிபடுவது வழக்கமாக இருந்துள்ளது. இதை புலிக்குத்திக்கல் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதேபோல் பன்றிக்குத்திக்கல், குதிரைக்கல், குத்திக்கல், யானைப்போர் நடுகல் எனப் பலவகைகள் உள்ளன. தனது நாட்டு அரசன் போரில் வெற்றி பெற்றால் தன் உயிரையே பலியிடுவதாகப் பொதுமக்கள் வேண்டிக்கொள்வது நவகண்டம் எனப்படும். இதில், கணவன் இறந்தவுடன் அந்த சிதையிலேயே உடன்கட்டை ஏறும் பெண்ணிற்கு எடுக்கப்படும் நினைவுக்கல்லிற்குச் 'சதிக்கல்' என்று பெயர். நடுகற்களை வழிபாடு செய்த பழந்தமிழர்கள் அதை வீரவணக்கமாக எண்ணினர். இனக்குழு வேடர் மரபிலிருந்து தோன்றி வளர்ந்து வீரமரபிற்குரிய வழிபாடாக மாற்றமடைந்தது நடுகல் வழிபாடாகும். இதனை, "நடுகல் **(Herostone)** என்பது பெருங்கல்லறைகள் **(Megaliths)** என்ற சடங்கு ரீதியான நினைவுச் சின்னங்களில் அடங்கும். அது சமய ரீதியானது என்று குப்தா குறிப்பிட்டுள்ளார்" என கேசவராஜ் கூறுவது இங்கு நினைவுகூறத்தக்கது (Kesavaraj, 2008).

## தமிழர்களின் நடுகல் வழிபாடு

இந்தியாவில் நடுகற்கள் என்பது இமாச்சலப்பிரதேசம் தொடங்கி தெற்கில் கேரள மாநிலம்வரை காணப்படுகின்றன. 2008-ஆம் ஆண்டில் வெ. கேசவராஜ் எழுதிய நூலின் அடிப்படையில் தென்னிந்தியாவில் கருநாடக மாநிலத்திலேயே அதிக அளவு 397 நடுகற்களும், தமிழ்நாட்டில் 202 நடுகற்களும், ஆந்திராவில் 126 நடுகற்களும், கேரளாவில் ஒரு கல்லும் கண்டுபிடிக்கப்பட்டள்ளன என்று குறிப்பிடுகின்றார் (Kesavaraj, 2008). இதில், பண்டையத் தமிழர்களின் நடுகல் வழிபாட்டுமுறையைத் தொல்காப்பியத்தின் வழி அறியமுடிகின்றது. ஆனிரைப்போரில் வீழ்ந்துபட்டவர்களுக்கு நடுகல் வழிபாடு செய்வதைக் காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என ஆறு துறைகளில் விரித்துக் கூறுகிறது.

"காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்

சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே" (தொல். பொருள்.நூ.63)

உலகில் பிற கடவுளர் உண்டெனிலும் அவற்றைப் போற்றும் வாழ்க்கை முறை தமக்கு இல்லையென மறக்குடி மகள் கூறுவதாகச் சுட்டப்பட்டள்ளது. தம் நிலத்தில் பூக்கும் மலர்களும், விளையும் உணவுப் பொருள்களும் வாழும் குடிபடைகளும், வீழ்ந்து நடுகல்லான வீரத் தெய்வங்களுமன்றிப் பிற நிலத்திலிருந்தும் வேறு புலத்திலிருந்தும் வந்தனவற்றை ஏற்காத மனநிலையை மாங்குடிக்கிழாரின் மூதின்முல்லைப்பாட்டு புலப்படுத்துகின்றது (Venkatasamy Nattar, 2010).

## காட்சி

சேர வேந்தனான செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றபோது, அங்கு வாழும் குன்றக் குறவர்கள் வேங்கை மரத்தடியில் கண்ணகி நின்ற கோலத்தையும், அதன்பின் கணவனோடு விண்ணுலகு சென்றதையும் எடுத்துக்கூறினர். பின்னர்தான் கண்ணகி பற்றி சாத்தனார்வழி சேரன் அறிகின்றான். உடனே, பத்தினிப்பெண்ணான கண்ணகிக்குக் கல்நட்டு வழிபட எண்ணும்பொழுது வடவேந்தர்களான கனக, விசயரின் வீறாப்பான பேச்சு அவனை இமயத்திற்குச் செல்லத் தூண்டியது. இதனை,

"…………. நம் அகல்நாடு அடைந்தவிப்

பத்தினிக் கடவுளைப் பாசல் வேண்டும்" (சிலப். வஞ்சி.பா.வ.113-114)

என்றும்

“ஒற்கா மரபிற் பொதியில் அன்றியும்

விற்றலைக் கொண்ட வியன்பேர் இமயத்துக்

கற்கால் கொள்ளினும் கடவுள்ஆகும்” (சிலப். வஞ்சி. பா.வ.117-120)

என்றும் சிலப்பதிகாரம் கூறுவதன் வழி அறியலாம். சேரன் கண்ணகிக்கு நினைவுக்கல் எடுக்க, இமயத்தை தேர்ந்தெடுத்தது காட்சியாகும் (Venkatasamy Nattar, 2010).

“வில்தலைக் கொண்ட வியன்பேர் இமயத்து, ஓர்

கற்கொண்டு பெயரும் எம் காவலன்…………” (சிலப். வஞ்சி.பா.வ.181-182)

## கால்கோள்

இன்றைய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியில் இமயம் நோக்கிச் செல்வது என்பது எளிது. ஆனால், எந்த ஒரு அறிவியல் சாதனங்களும் இல்லாத சூழலில் படை நடத்திச்சென்று இமயத்தில் கால்பதிப்பதற்குள் மன்னனும் மற்றவர்களும் பல இன்னல்களைச் சந்தித்திருக்க வேண்டும். அவ்வின்னல்களைப் பொருட்படுத்தாமல், படையை இமயத்தில் நிறுத்தியது கால்கோள் ஆகும். படைகொண்டு சென்ற சேரன் வெறுங்கையுடன் திரும்பாமல் பகைவரை வென்று, அங்கேயே கல்லை எடுத்து வந்தான் என்பதை,

“வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த

பல்வேல் தானைப் படைபல ஏவிப்

பொற்கோட்டு இமயத்துப் பொருவறு பத்தினிக்

கற்கால் கொண்டனன் காவலன் ஆங்கென்” (சிலப். வஞ்சி.பா.வ.251-254)

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இப்போரானது இன்றும் வரலாற்றில் கூறும் அளவிற்குச் சிறப்புப்பெற்றுள்ளது (Venkatasamy Nattar, 2010). அதாவது தேவாசுரப்போர் 18 ஆண்டுகளும், இராம இராவணப்போர் 18 மாதங்களும், பாரதப்போர் 18 நாட்களும் நடைபெற்றபொழுது 18 நாழிகைகளில் கனகவிசயரை வென்ற பெருமை சேரன் செங்குட்டுவனையே சாரும்.

## நீர்ப்படை

கல் எடுத்தபின் அடுத்த நிலையாக உள்ளது நீர்ப்படை செய்வதாகும். அதாவது தூய நீரில் உரிய மரபுகளோடு கல்லினை நீராட்டுவது நீர்ப்படையாகும். அம்முறையில் சினம்பொருந்திய வேலேந்திய தன்னுடைய படைவீரருடன், கங்கைப் பேரியாற்றின் கரையினிடத்துச் சென்று, அனைவரும் வணங்குவதற்குரிய பத்தினிக் கடவுளுக்கான கல்லினை வேதநூல்களை அறிந்த சான்றோர்களின் உதவியோடு முறைப்படி, நீர்ப்படை செய்வித்தான் (Venkatasamy Nattar, 2010).

“………………. சினவேல் தானையொடு

கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து,

பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை

நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து” (சிலப். வஞ்சி.பா.வ.13-16)

## கண்ணகிக்கு நடுகல் எடுத்தல்

தன் கற்புத் திறத்தால் கணவனைக் கொன்ற மதுரையைத் தீக்கு இரையாக்கிய கண்ணகி, அங்கிருந்து சேரநாடு வந்து குளிர்ந்த கிளையை உடைய வேங்கையின் கீழிருந்து விண்ணகம் சென்ற

இடத்திற்கு, அந்தணர், ஆசான், பெருங்கணி, சிறப்புடைய கம்மியர் ஆகியோருடன் சேரன் வந்தான். நூல்களில் கூறப்பட்ட நெறிப்படி கம்மியரால், வகுக்கப்பட்ட பத்தினிக் கோட்டத்தில், இமயமலையின் செம்மையான மலைப்புறத்தே, இமயத்து உச்சியிலுள்ள கடவுளைப் போற்றிக் கால்கொண்டு கொணர்ந்து, கைவினைகள் எல்லாம் முடிவுபெற்று விளங்கிய கண்ணகி உருவப் படிமத்தில், கைத்தொழில் வல்லுநர் இயற்றிய சிறந்த அழகினை உடைய அணிகல்னகள் முழுவதும் பூட்டிப் பூப்பலி செய்து, காப்புக்கடை நிறுத்தி, வேள்வியும் விழாவும் நாள்தோறும் நடைபெறுமாறு ஒழுங்குசெய்து, மானிடப்பெண்ணைக் கடவுளாக்கினான் (Venkatasamy Nattar, 2010).

“அறக்களத்து அந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று,
மேலூர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து,
இமையவர் உறையும் சிமையச் செவ்வரைச்
சிமைச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறத்தி
வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து
கடவுள் மங்கலம் செய்க என ஏவினான்” (சிலப். வஞ்சி.பா.வ.222-233)

## வாழ்த்து

சேரன் முயற்சியால் எழும்பிய பத்தினிக் கோட்டத்தில் உள்ள கண்ணகிப் படிமத்திற்குக் கடவுள் மங்களம் நடைபெற்றது. செங்குட்டுவன் வந்திருந்தான். பல சிற்றரசர்களும் வந்து திறை செலுத்தினர். தேவந்தி முதலியோர் கண்ணகி கோயிலுக்கு வந்து அரற்றினர். கண்ணகி தேவவடிவிலே தோன்றுகின்றாள். செங்குட்டுவனையும் பிறரையும் வாழ்த்துக்கின்றாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது (Venkatasamy Nattar, 2010).

“தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்து ஆயினான் நானவன் தன்மகள்
வெண்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும், வம்மெல்லாம்” (சிலப். வஞ்சி.பா.வ.7-10)

## வரந்தரல்

கண்ணகியைக் கடவுளாக்கி வழிபாடு நடத்தும்பொழுது, அங்கு வந்திருந்த அனைவருக்கும் கண்ணகி வேறோர் உருவத்தில் தோன்றி வரம் கொடுத்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அத்துடன், அனைவரும் வந்து தினந்தோறும் முறையாக வழிபாடுகள் நடத்த சேரன்செங்குட்டுவன் அனுமதியும் வழங்கினான். வாழ்வில் இன்பங்களை இழந்து, வறுமையில் வாடுவோர் இங்கு வந்து வழிபட்டால் இழந்த இன்பங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் வேரூன்றியுள்ளது. ஏனெனில், கணவனை இழந்த கண்ணகி மீண்டும் கணவனைத் தேவவடிவில் சந்தித்து விண்ணுலகம் சென்ற இடம்

ஆதலாலும், அவளின் நினைவாக அங்கு பத்தினிக் கோட்டம் அமைந்துள்ளதாலும் தங்களின் வேண்டுதல் நிறைவேறும் என்று நம்புகின்றனர்.

## முடிவுரை

சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகிக்கான நடுகல் இன்று, கண்ணகி கோவில், மங்கலதேவி, மங்களா தேவி, பத்தினிக்கோட்டம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. கேரளத்தின் இடுக்கி மாவட்டத்திலுள்ள குமுளி என்ற ஊரிலிருந்து சுமார் 14 கி. மீ தொலைவிலும், தமிழ்நாட்டின் கூடலூர் வனப்பகுதியில் புளயங்குடி என்னுமிடத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 5000 மீட்டர் உயரத்தில் உள்ளது. ஆண்டுக்குச் சித்திரா பௌர்ணமி தினத்தன்று ஒரு நாள் மட்டுமே இக்கோயில் பகுதிக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். மணிமேகலைக் காப்பியம் கூறும் கூற்றின்வழி நடுகற்கள், கால வளர்ச்சியில் கோயிலானது என்ற கூற்றிற்கு அரண்சேர்க்கின்றது.

## துணைநூற்பட்டியல்

Kesavaraj, V., (2008) South Indian Heroic Stones, Kavya Pathippagam, Chennai, India

Krishnamoorthi, S., (2004) Hero stone, Meyyappan Pathippagam, Chennai, India

Venkatasamy Nattar, N.M., (2010) Silapathikaram Moolamum Uraiyum, Ramaiah Pathipagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License